S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service), Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு


தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE சனி நவம்பர் 08 * 2025 * மலர் -1 * இதழ்-160* VOL-1 * ISSUE-160 விலை ரூ.3 * பக்கம் -4

## மணமக்களை வாழ்த்திய முதலமைச்சர்



சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற, செங்குன்றம் மிசா ஏழுமலை பேரனும், பாபு கலைவாணி தம்பதியரின் மகனுமான திலீபன்பாபு மற்றும் செல்வகுமார் பார்வதவர்த்தினி தம்பதியரின் மகள் கௌதமி பிரபா ஆகியோரது திருமணவிழாவை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையேற்று நடத்திவைத்து, மணமக்களை வாழ்த்தினார்.



கோவை அருகே செல்வபுரம் புட்டுவிக்கி அணைக்கட்டில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

### கோவையில் மீண்டும் அட்டூழியம்:

# அலறல் சத்தத்துடன் காரில் இளம் பெண் கடத்தல்!

## சி.சி.டி.வி. காட்சி வெளியாகி பரபரப்பு!!



கோவை,நவ.08–

கோவையில் அலறல் சத்தத்துடன் ஒரு இளம் பெண்ணை காரில் வேகமாக கடத்திச் சென்ற சிசிடிவி காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கோவை இருகூர் தீபம் நகர் பகுதியில் சென்றுகொண்டிருந்த பெண்ணை, நேற்று மாலை வெள்ளை நிற காரில் வந்த சிலர், வலுகட்டாயமாக இழுத்துக் காரில் ஏற்றிச் சென்றதை அப்பகுதி மக்கள் பார்த்துள்ளனர்.

இதுதொடர்பாக,சிங்காநல்லூர்காவல்துறையினருக்கு உடனடியாக அப்பகுதி மக்கள் தகவல் கொடுத்தனர். சம்பவ இடத்திற்கு சென்ற காவல் துறையினர், பெண் கடத்தப்பட்டாரா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? யார் அந்த இளம் பெண்? அந்தக் கார் எங்கு சென்றது என தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் அங்கு பொருத்தப்பட்டு இருந்த கண்காணிப்பு கேமிராவில், காரில் இருந்த பெண் அலறும் சப்தம் கேட்கிறது. பின்னர் வேகமாக அந்த காரை எடுத்துச் செல்லும் காட்சிகள் பதிவாகி உள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கோவை சர்வதேச விமான நிலையத்துக்கு பின்புறம், கல்லூரி மாணவியை மூன்று பேர் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் தமிழகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதனிடையே, தமிழகம் கேரளம் எல்லையான வாளையார் பகுதியில் இளம் பெண்ணை மிரட்டி பணம், நகை பறித்த சம்பவம் தொடர்பாக ரேஸ்கோஸ்ட் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். அந்த சம்பவத்தில் காவல்துறை அதிகாரியின் மகனுக்கு தொடர்பு இருப்பதாக கூறப்படுகிறது. கோவையில் அடுத்தடுத்து இளம் பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.





மஞ்சமேடு கிராமத்தில் மூன்றாம் குலோத்துங்கன் கால கல்வெட்டு கண்டுபிடிப்பு:

# கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளது போல் மஞ்சுமாடம் என கிராம பெயரை மாற்றியமைக்க கோரிக்கை!

போச்சம்பள்ளி, நவ.8

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அருகே உள்ள மஞ்சமேடு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலர் அண்ணாமலை அளித்த தகவலின்பேரில், கிருஷ்ணகிரி மாவட்ட வரலாற்று ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் குழு மஞ்சமேடு கிராமத்தில் ஆய்வு மேற்கொண்டனர். கோட்டீஸ்வர நயினார் என்பவரின் தென்னந்தோப்பில் கிழக்கு நோக்கிய நிலையில் ஒரு கல்வெட்டு படைப்பு சிற்பத்தோடு காணப்பட்டது. இதன் இரு பக்கத்திலும் கல்வெட்டு உள்ளது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு காப்பாட்சியர் சிவக்குமார் மற்றும் தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவனச் செயலாளர்கோவிந்தராஜ், தொன்மை இயல் ஆய்வு அதிகாரிகள்உட்பட கிராம மக்கள்பலர் இருந்த நிலையில், கல்வெட்டின் சுவடுகளை ஆய்வு செய்து, தகவல்களை பெற்றுச்சென்ற நிலையில், இது குறித்து தகவலை சமர்ப்பித்தனர். அதில் கூறியிருப்பதாவது "தருமபுரியில் இருந்து ஆந்திரா மாநிலம் பூதலப்பட்டு வரை செல்லும் அதியமான் பெருவழியை ஒட்டிய பகுதிகளில் அண்மைக்காலமாக வணிகக்குழு கல்வெட்டுகள் கிடைத்து வருகின்றன. மஞ்சமேடு என்கிற கிராமம் அவ்வழியில் அமைந்துள்ள ஒரு ஊராகும். இங்கு கிடைத்திருப்பது எழுபத்தொன்பது நாட்டார் என்ற வணிகக்குழு கல்வெட்டாகும்.

நிகரிலிசோழ மண்டலத்து கங்க நாட்டு, தகடூர் நாட்டு, எயில் நாட்டு, மேல்கூற்று, பாரூர்பற்றில் உள்ள மஞ்சமாடத்தில் இருக்கும் மஞ்சமாட எம்பெருமான் பெரிய நாட்டுப் பெருமாளுக்கு எழுபத்தொன்பது நாட்டு பெரிய நாட்டார் கூடி தங்கள் ஒவ்வொரு ஊரில் இருந்தும், தலா ஒரு பணம் வீதம் வசூலித்து கொடுத்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

இக்கல்வெட்டின் முன் பக்கம் உள்ள கஜலட்சுமியின் சிற்பம் மிகவும் நுட்பமாக பெரிய மார்பகங்களோடு செதுக்கப்பட்டுள்ளது. வலது பக்க யானை கலசத்தில் இருந்து நீரை ஊற்றுகிறது. இடப்பக்க யானை மலரை தூவுகிறது. அருகே கெண்டி, இணை பாதம், தண்டம், குடை, கத்தி, சேவல், பன்றி, சித்திரமேழி எனப்படும் ஏர் கலப்பை, குத்துவிளக்கு போன்ற வணிக சின்னங்கள் காட்டப்பட்டுள்ளன. இக்கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்கனின் 22ம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டதாகும்.

எனவே இக்கல்வெட்டு வாயிலாக மஞ்சுமாடம் என்று இன்றைக்கு சரியாக 825 ஆண்டுகளுக்கு முன் அழைக்கப்பட்ட ஊர் தற்போது மஞ்சமேடு என்று அழைக்கப்படுகிறது என்று தெரியவருகிறது. மேலும் தற்போது இங்கிருந்து ஒரு கி.மீ., தொலைவில் உள்ள வாடமங்கலம் பெருமாள் கோவிலைத்தான் இக்கல்வெட்டு மஞ்சுமாட எம்பெருமான் பெரியநாட்டுப்பெருமாள் என்று குறிப்பிடப்படுகிறது" என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து நிலத்தின் உரிமையாளர் கோட்டீஸ்வர நயினார் கூறியதாவது, முப்பாட்டன் காலத்தில் இருந்து வழிவழியாக இக்கல்வெட்டில் உள்ள கஜலட்சுமியின் தெய்வத்தை வாரம்தோறும் வெள்ளிக்கிழமை, மஞ்சலிட்டு பூஜித்து வருகிறோம். கஜலட்சுமியின் தெய்வத்தை வழிபட்டு வருதால் குடும்பத்தில் பல சிக்கல் நீங்கியுள்ளதாகவும், ஆதலால் வாரம் தவறாமல் வழிபட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதுகுறித்து கிராமத்தை சேர்ந்த ராமமூர்த்தி அவர்கள் கூறியதாவது, 825 ஆண்டுகளுக்கு முன்பு வணிகர்களின்புகழிடமாக இருந்த மஞ்சுமாடம் என்கிற கிராமத்தின் பெயர் காலப்போக்கில் மஞ்சமேடு என பெயர்பெற்றுள்ளது. மூன்றாம் குலோத்துங்கனின் 22ம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட இந்த கல்வெட்டில் அவை குறிப்பிடப்பட்டுள்ளது, எங்களுக்கும் எங்கள் கிராம மக்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆகையில் மாவட்ட நிர்வாகம் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது போல் எங்கள் கிராமத்தின் பெயரை மஞ்சுமாடம் என பெயர் மாற்றிக்கொடுக்க வேண்டுமெனவும், 825 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த கல்வெட்டை நினைவு சின்னமாக அறிவித்து பாதுகாக்க வேண்டுமெனவும், இந்த கல்வெட்டை சுற்றியுள்ள விவசாய நிலங்களில் மேலும் இதுபோன்ற கல்வெட்டுகள் இருப்பதாகவும், அரசு தீவிரமாக ஆய்வு செய்தால் கீழடி போன்று வரலாற்று சிறப்பு மிக்க கல்வெட்டுகளும், பழமையான செப்போடுகளும் கிடைக்க அதிக வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

போச்சம்பள்ளி அருகே

# கல்லூரி மாணவர் மீது டிப்பர் லாரி ஏறி இறங்கியதில் சம்பவ இடத்திலேயே பலி!

## இருந்த ஒரே மகனையும் வாரி கொடுத்துட்டேனே என தாய், தந்தை கதறி அழுத காட்சி!!

கிருஷ்ணகிரி,நவ.8



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்று விடியற்காலை முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. காலை முதலே பள்ளி கல்லூரிக்கு விடுமுறை அளிப்பார்களா என மாவட்ட நிர்வாகத்தின் அறிவிப்புக்காக பள்ளி கல்லூரி மாணவர்கள் காத்துக் கிடந்த நிலையில் மாவட்டத்தில் இருந்து எவ்வித அறிவிப்பும் வெளியாகாத நிலையில் மழையில் நனைந்தவாறு பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பள்ளி கல்லூரிகளுக்கு வரத் தொடங்கினர் இந்நிலையில் ஊத்தங்கரை அடுத்த A.வெள்ளாளப்பட்டி ஊராட்சி சந்திரபட்டி கிராமத்தைச் சேர்ந்த மகாத்மா என்பவரது மகன் செல்வேந்தன் 29 வயதான இவர் போச்சம்பள்ளியில் உள்ள அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் ரோபோட்டிக் படித்து வரும் நிலையில் அவர் இன்று காலை கல்லூரிக்கு தனது இரு சக்கர வாகனத்தில் மழையில் நனைந்தவாறு வந்து கொண்டுள்ளார் அப்பொழுது சிப்காட் அருகேயுள்ள சூளகரை அருகே எதிரே எம். சேன்ட் ஏற்றி வந்த டிப்பர் லாரி ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்து கல்லூரி மாணவரின் மீது மோதி ஏரி இறங்கியது இதில் சம்பவ இடத்திலேயே பலியான செல்வேந்தன் துடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து தகவல் அறிந்து வந்த கல்லாவி போலீசார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக போச்சம்பள்ளி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதில் செல்வந்தனின் உடலைக் கண்டு கதறி அழுத பெற்றோர் மற்றும் உறவினர்கள் சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



சென்னையில் நடைபெற்ற மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான ஜூடோ போட்டியில், நமது கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த,பிரதீப் (தங்கப் பதக்கம்) சரண் (தங்கப் பதக்கம்) ஹேமந்த் (வெண்கலப் பதக்கம்)நவநீதன் (வெண்கலப் பதக்கம்) நான்கு மாணவர்கள் சிறப்பாக பங்கேற்று 2 தங்கப் பதக்கங்கள் மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களை வென்று, மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள். வெற்றி பெற்ற மாணவர்கள் பதக்கங்களுடன் சென்று பர்கூர்சட்டமன்ற உறுப்பினரும்திமுக மாவட்ட கழக செயலாளருமான தே.மதியழகன் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்கள். மாணவர்கள் மென்மேலும் உலக அளவில் உயர்ந்து பல்வேறு பதக்கங்களை வென்றுநாட்டிற்கும்,நமதுமாவட்டத்திற்கும்பெருமைசேர்க்கவேண்டும்என்றுமனதாரவாழ்த்தினார்.



திருப்பத்தூர் அருகே

# ஜலகாம்பாறை நீர்வீழ்ச்சியில் அதிகளவு தண்ணீர் கொட்டுவதால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை!

திருப்பத்தூர்,நவ.8

திருப்பத்தூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கன மழையால் திருப்பத்தூர் அடுத்த ஜலகாம்பாறை நீர்வீழ்ச்சியில் அதிக அளவு தண்ணீர் கொட்டி வருகிறது.

இப்பகுதியில் பிரசித்தி பெற்ற முருகன் கோயில் உள்ளதால் தமிழ்நாடு மட்டுமல்லாமல் கர்நாடகா, ஆந்திரா, என பிற மாநிலங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகை தந்து நீர்வீழ்ச்சியில் குளித்து பின்னர் முருகனை தரிசித்து செல்கின்றனர்.

அது மட்டுமல்லாமல் சுற்றுவட்டாரப் பகுதியை சேர்ந்த பொதுமக்கள் இறந்தவர்களுக்கு காரியம் முடிந்த பின்னர் ஜலகாம்பாறை நீர்வீழ்ச்சிக்கு வந்து அங்கு சடங்குகள் செய்கின்றனர்.

இந்த நிலையில் தொடர் கனமழையால் ஜலகாம்பாறை நீர்வீழ்ச்சியில் அதிக அளவிற்கு நீர் கொட்டி வருவதால் வனத்துறையினர் சுற்றுலா பயணிகளுக்கு நீர்வீழ்ச்சியில் குளிக்க தடை விதித்துள்ளனர்.

சிதம்பரம்:

# அனந்தீஸ்வரருக்கு அன்னாபிஷேகம்!

சிதம்பரம், நவ.8



சிதம்பரம் அனந்தீஸ்வரன் கோயிலில், அனந்தீஸ்வரருக்கு அன்னாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. கடலூர் மாவட்டம் சிதம்பரம் ஸ்ரீ அனத்தீஸ்வரர் கோயிலில் ஐப்பசி மாத பௌர்ணமி பூஜை முன்னிட்டு 500 கிலோ சாதம் மற்றும் காய்கறிகளால் அன்னாபிஷேகம் நடத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்டது, அன்னாபிஷேகத்தை முன்னிட்டுசிறப்புஅபிஷேக, ஆராதனைநடைபெற்றது. இந்நிகழ்ச்சியை திரளான பக்தர்கள் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர். கோயில் இருங்கள் ராஜா அன்னாபிஷேகத்தை நடத்தி வைத்தார்.

# தளிஅள்ளி ஊராட்சியில் பூத் கமிட்டி நடைபெறும்; வடக்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன் அறிக்கை!

கிருஷ்ணகிரி,நவ.8



தளிஅள்ளி ஊராட்சியில் பூத் கமிட்டி நடைபெறும் என வடக்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன் அறிக்கை நாளை தமிழக வருங்கால முதல்வர் தமிழக சட்டப்பேரவை கழகப் பொதுச் செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் புரட்சித்தமிழர் எடப்பாடியார் ஆணைப்படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டினம் வடக்கு ஒன்றியம் தளிஅள்ளி ஊராட்சியில் பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டத்திற்கு வருகை தரும் கழகத் துணைப் பொதுச் செயலாளர் வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் கே. பி.முனுசாமி மற்றும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் அசோக்குமார் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள் வருகை தர இருப்பதால் காவேரிப்பட்டினம் ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன் தலைமையில் வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட தளிஅள்ளி, மாரிசெட்டி அள்ளி, பாலேகுளி, எருமாம்பட்டி, பென்னேஸ்வரமடம், நெடுங்கல், அவத்துவாடி, தட்ரஹள்ளி, மருதேரி, விளங்காமுடி வீரமலைஆகிய ஊராட்சிக்கு உட்பட்ட பூத் கமிட்டி நிர்வாகிகள் தகவல் தொழில்நுட்ப நிர்வாகிகள் ஒன்றிய மாவட்ட கழக நிர்வாகிகள்அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அறிக்கை விடுத்துள்ளார்.

வாணியம்பாடி அருகே

# மின்சாரம் தாக்கி கூலி தொழிலாளி படுகாயம்; சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் அனுமதி!



வாணியம்பாடி, நவ.8

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த வளையாம்பட்டு பகுதியை சேர்ந்தவர் முத்து(55). இவர் தோல் தொழிற்சாலையில் வேலை செய்து வருகிறார். இந்த நிலையில் நேற்று காலை இவர் தனது வீட்டின் அருகே உள்ள முருங்கை மரத்தில் முருங்கைகாய் பறிக்க சென்றுள்ளார். அப்போது இரும்பு தொரட்டியைகையில்வைத்துக்கொண்டு முருங்கைக்காய் பறித்த போது வாணியம்பாடி மின் நிலையத்திற்கு மின்சாரம் செல்லும் 110 கேவி கொண்ட உயர் மின் அழுத்த மின் கம்பியில் அந்தத் தொரட்டி உரசியதில் மின்சாரம் பாய்ந்துள்ளது.

இதில் முத்து உடல் முழுவதும் தீயில் கருகி அங்கேயே மயங்கி விழுந்தார். இதைப் பார்த்த பகுதி மக்கள் உடனடியாக வாணியம்பாடி மின்சார அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்தனர்.

தகவலின் பேரில் மின்சார துறையினர் மின் இணைப்பை துண்டித்து பின்னர் அவரை மீட்டு சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் 70 சதவீத தீக்காயங்களுடன் மிகவும் கவலைக்கிடமாக இருந்ததால் உடனடியாக அவரை மேல் சிகிச்சை க்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.அங்கே தீவிர சிகிச்சை மேற்கொண்டு வருகிறது. சம்பவம் குறித்து கிராமிய போலீசார் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் அந்தப் பகுதியில் உயர் மின் அழுத்த மின் கம்பிகள் மிகவும் தாழ்வாக செல்வதால் இது போன்ற நிலை ஏற்பட்டதாகவும் மின்சாரத் துறையினர் நடவடிக்கை எடுத்து இவற்றை சரி செய்ய வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.



# தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து 500 மெகாவாட் மின்சாரத்தை கொள்முதல் செய்யும்!

சென்னை, நவ. 8

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் வெளியிட்ட டெண்டரில், மொத்தம் 500 மெகாவாட் மின்சாரத்தை வழங்கும் ஒப்பந்தத்தை வேதாந்தா குழுமத்தின் மின்சார பிரிவு பெற்றுள்ளது. இதில், மீனாட்சி எனர்ஜி லிமிடெட்டுக்கு 300 MWவும், சத்தீஸ்கர் வேதாந்தா அனல் மின் நிலையத்துக்கு 200 MWவும் ஒதுக்கப்பட்டுள்ளது.இந்த ஒப்பந்தம் 2026 பிப்ரவரி 1 முதல் 2031 ஜனவரி 31 வரை அமல்படுத்தப்படுகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு ₹5.38/kWh விலையில் மின்சாரம் வழங்கும் வகையில் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. 1,580 MW திறன் வழங்க அழைக்கப்பட்ட டெண்டரில், அதிக பட்ச பங்கைக் கொண்ட 500 MWஐ பெறுவது வேதாந்தா பவர் பிரிவின் திறனையும், நம்பகத்தன்மையையும் உறுதிசெய்கிறது.

இந்த ஒப்பந்தம் குறித்து, வேதாந்தா மின்சார பிரிவு தலைமை நிர்வாக அதிகாரி ராஜேந்திர சிங் அஹீஜா கருத்து தெரிவித்தார்.

"இந்த ஒப்பந்தம் இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தும் முக்கிய முன்னேற்ற மாகும். மீனாட்சி எனர்ஜி மற்றும் சத்தீஸ்கர் பவர் நிலையங்கள் நம்பகமான உற்பத்திதிறனைநிரூபித்துள்ளன," என அவர் தெரிவித்தார்.

# மில்க் பிக்கிஸ் ஸ்மார்ட் என்கிற புதிய வகையுடன் பிரிட்டானியா மில்க் பிக்கிஸை விரிவுபடுத்துகிறது!

நாகர்கோவில்,,நவ.8

பிரிட்டானியா இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் தனது மில்க் பிக்கிஸ் வரிசையில் புதிய தயாரிப்பாக மில்க் பிக்கிஸ் ஸ்மார்ட் என்ற பிஸ்கட்டினை அறிமுகப்படுத்தியுள்ளது. இது இந்தியாவில் முதல் முறையாக டிஎச்ஏ (DHA) மற்றும் 16 நுண்ணூட்டச் சத்துக்களால் செறிவூட்டப்பட்ட பிஸ்கட்டாகும். 100% கோதுமை மாவினால் தயாரிக்கப்பட்ட இந்த பிஸ்கட் குழந்தைகளின் அறிவாற்றல் வளர்ச்சிக்கு உதவுகிறது. உலகச்சதுரங்க சாம்பியன் குகேஷ் டொம்மராஜு தலைமையில் இந்த தயாரிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் தலைமை மேம்பாடு மற்றும் தர அலுவலர் சுதிர் நேமா அவர்கள் கூறுகையில், மில்க் பிக்கிஸ் பல தசாப்தங்களாக தமிழ்நாட்டில் குடும்பங்களின் நம்பிக்கையை பெற்றுள்ளது என்றும், குழந்தைகளின் வளர்ச்சிக்காக DHA, கோலின், B வைட்டமின்கள், இரும்பு, கால்சியம், வைட்டமின் டி, ஜிங்க் போன்ற சத்துக்களால் செறிவூட்டப்பட்ட புதிய மில்க் பிக்கிஸ் ஸ்மார்ட் அதன் மரபை தொடர்ந்து சிறந்த தயாரிப்பாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.




இந்த தயாரிப்பை குறித்து குகேஷ் டொம்மராஜு அவர்கள், "ஒவ்வொரு அசைவும் முக்கியம், ஆரம்பத்தில் எடுக்கும் முடிவுகளே வெற்றியைநிர்ணயிக்கும்" என்ற செஸ் தத்துவத்தை நினைவூட்டினார். மில்க் பிக்கிஸ் ஸ்மார்ட் பிஸ்கட் ஒவ்வொன்றும் சதுரங்க வடிவத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளதால், சுவையுடனும் விளையாட்டுத்தனத்துடனும் சிறந்த அனுபவத்தை அளிக்கிறது. இந்த தயாரிப்பு தற்போது தமிழகம் முழுவதும் உள்ள கடைகளிலும் பிக்பாஸ்கெட் ஆன்லைன் தளத்திலும் கிடைக்கிறது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் ரோட்டரி கிளப் மண்டபத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் மாநில தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்ட கழக துணை பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழக செய்தி துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களையும் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளராக அறிவிக்கப்பட்ட இல.பத்மாநாபன் அவர்களையும் தாராபுரம் மேற்கு ஒன்றிய திராவிட முன்னேற்ற கழக சார்பில் ஒன்றிய ச



நீலகிரி மாவட்டம், முதுமலை புலிகள் காப்பகம் மசினகுடி, சிங்காரா வனச்சரகத்திற்கு உட்பட்ட காப்பு காட்டிலிருந்து அன்னிய தாவரமான உன்னிச்செடிகளை (Lantana camara) அரைத்து பிரிகட்டிங் கட்டிகளாக தயாரிக்கும் முறைகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று முன்தினம் சமூக நலன் (ம) மகளிர் உரிமைத் துறை சார்பில் குழந்தை திருமணம் (ம) குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான விழிப்புணர்வு பிரச்சார வாகன பேரணியை மாவட்ட ஆட்சி தலைவர் மு பிரதாப் கொடி அசைத்து துவக்கி வைத்தார் மேலும் குழந்தை திருமணம் ஏற்பாடு செய்யப்பட்ட 104 பஞ்சாயத்து பகுதிகளில் இந்த வாகனத்தின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது என மாவட்ட சமூக நல அலுவலர் சோ வனிதா தெரிவித்தார் கண்காணிப்பாளர் பார்த்திபன் (ம) துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்



விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கடம்பன்குளம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக வைக்கப்பட்டுள்ள தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.



நாகப்பட்டினம்மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் எம்பி பிறந்தநாளை முன்னிட்டு நாகை அரசு மருத்துவமனையில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நாகை மாவட்ட செயலாளர் எம்.அணஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இரத்த வழங்கும் நிகழ்வில் நாகை நாகூர் திருமருகல் சிக்கல் திட்டச்சேரி ஏனங்குடி பகுதியை சேர்ந்த மக்கள் நீதி மய்யம் கட்சியினர் இரத்ததானம் வழங்கினார்கள். இந்த நிகழ்வில் நாகை மாவட்ட நிர்வாகிகள் பி.தனபாலன் சிக்கல் எம் இளங்கோ ஜி பிரான்சிஸ் எஸ்.செய்யது சாகிப் ஓம் பிரகாஷ் ராம்பிரசாந்த் முத்துக்குமார் அபுல் ஹசன் சரத்குமார் நவாஜ் சாகிப் ரிஃபத் சதீஷ்குமார் ரஹ்மத்துல்லா உமா உமாசங்கர் சிவபதேசேகர் மற்றும் மய்யம் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



இராணிப்பேட்டை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மரியம் பல்லவி பல்தேவ், சோளிங்கர் அடுத்த வேலத்தில் நடந்திடும் கிராம சாலைகள் பழுதுபார்க்கும் பணிகளை நேற்று பார்வையிட்டார். உடன் கலேக்டர் சந்திரகலா ,திட்ட இயக்குனர் ஊரகம் .சரண்யாதேவி. உதவி செயற்பொறியாளர்கள் சுமதி. ஜெரால்ட், வட்டாட்சியர்செல்வி மற்றும் அலுவலர்கள் பலர் இருந்தனர்.

### ஆண்டிப்பட்டி அருகே

# தரைபாலம் சேதமடைந்து கம்பிகள் வெளியில் தெரியும்படி பள்ளம் ஏற்பட்டு ஆபத்தான நிலையில் காட்சி!

ஆண்டிபட்டி, நவ.08

ஆண்டிப்பட்டி அருகே உள்ளஸ்ரீரங்கபுரம் கிராமத்தின் மையபகுதியில் அமைந்துள்ள தரைபாலம் சேதமடைந்து கம்பிகள் வெளியில் தெரியும்படி பள்ளம் ஏற்பட்டு ஆபத்தான நிலையில் காட்சியளிக்கும்நிலையில், ஓராண்டாகியும் இதுவரை அரசு அதிகாரிகள் கண்டுகொள்ளாததால் நாள்தோறும் அச்சத்தோடு அந்த பகுதியை கடந்து செல்வதாக

அமைக்கப்பட்ட தரைப் பாலம்கடந்த ஓராண்டுக்கு முன்பு சேதமடைந்து அதிலுள்ள கம்பிகள் வெளியில் தெரியுமளவிற்கு பள்ளம் ஏற்பட்டு ஆபத்தான முறையில் காட்சியளித்து வரும் நிலையில் , ஓராண்டுகள் ஆகியும் இதனை அரசு அதிகாரிகள் கண்டு கொள்ளாமல் அலட்சியமாக விட்டுவிட்டதால் நாள்தோறும் இந்தப்பகுதியை அச்சத்தோடு கடந்து செல்வதாக கிராம மக்க



பொதுமக்கள் வாகன ஓட்டிகள் குற்றச்சாட்டு குழந்தைகள்அதிகம் வசிக்கும் பகுதி என்பதால் அடிக்கடி குழந்தைகள்பள்ளத்தில் தவறி விழுவதாகவும், இரவு நேரங்களில் வாகனங்களில் வருவோர்தவறி விழுவதாகவும் குற்றம் சாட்டும் கிராம மக்கள் ஏதேனும் அசம்பாவிதம் ஏற்படும் முன்பு தரைபாலத்தை சீரமைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர் தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள ஸ்ரீரங்கபுரம் கிராமத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வரும் நிலையில் இக்கிராமத்தின் மையப்பகுதியில் வைகைஅணை, ரெங்கசமுத்திரம் உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லும் நான்கு முனை சந்திப்பு பகுதியில் 5 ஆண்டுகளுக்கு முன்பு

ளும் வாகன ஓட்டிகளும் குற்றம் சாட்டுகின்றனர். இக்கிராமத்தில் குழந்தைகள் அதிகம் வசிக்கும் பகுதியில் ஏற்பட்டுள்ள இந்த பள்ளத்தால் அடிக்கடி குழந்தைகள் தவறி விழுவதாகவும் இரவு நேரங்களில் இருசக்கர வாகனத்தில் செல்வோர் விபத்தில் சிக்குவதாகவும் குற்றம் சாட்டும் கிராமமக்கள் இன்னும் சில தினங்களில் 12 கிராமங்கள் இணைந்து கொண்டு அதிகளவில் மக்கள்கூடும் திருவிழா இங்கு கொண்டாடப்பட உள்ளதாலும் பொதுமக்கள் குழந்தைகள் குடும்பத்தோடு அதிகம் கூடுவோர்கள் என்பதாலும் ஏதேனும் அசம்பாவிதம் ஏற்படும் முன்பு சேதமடைந்த தரைப்பாலத்தை உடனடியாக சீரமைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

### அன்னை தெரசா மகளிர் பல்கலை கழகத்தில் 32 வது பட்டமளிப்பு விழா:

# ஆளுநர் ஆர்.என் ரவி குத்து விளக்கு ஏற்றி துவங்கி வைத்தார்!

### நிகழ்ச்சியை புறக்கணித்தார் உயர்கல்வி துறை அமைச்சர் கோவி.செழியன்!!

கொடைக்கானல்,நவ. 8

திண்டுக்கல்மாவட்டம்கொடைக்கானல்அட்டுவம்பட்டி பகுதியில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. 32 வது பட்டமளிப்பு விழா இன்று நடைபெற்றது. இந்த விழாவில் தமிழக ஆளுநர் ஆர்.என் ரவி, குத்து விளக்கு ஏற்றி துவங்கி வைத்தார். இந்த விழாவில் மொத்தமாக 8486 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டது.



இதில் 376 பேர் ஆளுநரின் நேரடியாக பட்டங்களை வழங்கினார். தொடர்ந்து நிகழ்ச்சியில் 58 மாணவிகளுக்கு முனைவர் பட்டமும் 19 மாணவ மாணவிகளுக்கு தங்கம் வெள்ளி பதக்கங்களும் வழங்கப்பட்டது . பட்டமளிப்பு நிகழ்ச்சியில் பல்கலைக்கழக துணைவேந்தர் கீதாஞ்சலி தாஸ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார் . அன்னை தெரசா மகளிர் பல்கலை கழக துணை வேந்தர்கலா உள்ளிட்டோர்கலந்து கொண்டு சிறப்பித்தனர். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியை உயர்கல்வி துறை அமைச்சர் கோவி.செழியன் புறக்கணித்தார் . தொடர்ந்து கொடைக்கானலில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவை அமைச்சர் புறக்கணித்து வருவது குறிப்பிடத்தக்கது .





# மாநகராட்சி பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை!

### மாநகராட்சி கூட்டத்தில் வி.சி.க. கவுன்சிலர் குற்றசாட்டு!!

சிவகாசி, நவ. 8

சிவகாசி பைபாஸ் முக்கு பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பு கடைகளை அகற்ற மாநகராட்சி அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை நடவடிக்கை எடு க்க வில்லை. மாநகர மேயர் ஆக்கிரமிப்புகளை அகற்ற அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் என விசிக கவுன்சிலர் தங்கபாண்டி செல்வி கோரிக்கை விடுத்தார்.

சிவகாசி மாநகராட்சி கூட்டம் மேயர் சங்கீதா இன்பம் தலைமையில் நடைபெற்றது. துணை மேயா' விக்னேஷ்பிரியா காளிராஜன், ஆணையாளர் சரவணன் முன்னிலை வகித்தனர். மாநகராட்சி உதவி ஆணையாளர், சுகாதார அலுவலர்கள் , அதிகாரிகள், கவுன்சிலர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நடைபெற்ற விவாதம் வருமாறு.

கவுன்சிலர் தங்கபாண்டி செல்வி. எனது வார்டில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடத்தபட்டது. முகாமில் 5 பேருக்கு ரேசன் கார்டு கேட்டு விண்ணப்பம் வழங்க பட்டது. ஆனால் அதிகாரிகள் அந்த மனுக்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் வழக்கம் போல் காலதாமதம் செய்கின்றனர். இதே போல் பல்வேறு துறை சார்ந்த மனுக்கள் மீதும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் காலதாமதப் படுத்தி வருகின்றனர். மேயரின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக இதனை நான் கூட்டத்தில் தெரிவிக்கிறேன். மேயர் சங்கீதா இன்பம் அதிகாரிகளிடம் பேசி உடனடியாக அந்த மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகிறேன்.

கவுன்சிலர் ஸ்ரீநிகா.

மாநகராட்சி கூட்ட அஜண்டாவில் உள்ள அனைத்து தீர்மானத்தையும் தனிதனியாக மாநகராட்சி ஊழியர் படிக்க வேண்டும். அப்போதுதான் தீர்மானங்கள் மீது கவுன்சிலர்கள் விவாதம் நடத்த ஏதுவாக இருக்கும் என்றார். இதை தொடர்ந்து மாநகராட்சி கூட்ட பொருளில் உள்ள அனைத்துதீர்மானங்களும் தனி தனியாக படித்து விவாதம் நடத்த பட்டதால் சுமார் 3 மணிநேரம் வரை கூட்டம் நடைபெற்றது.

கவுன்சிலா சேதுராமன்

மாநகராட்சியில் அனைத்து பணிகளுக்கும் அதிகாரிகள் லஞ்சம் கேட்கின்றனர். சமானிய மக்கள் வீட்டு தீர்வை பெற வேண்டுமானால்அதிகாரிகள் ரூ.50ஆயிரம் வரை லஞ்சம் வாங்குகின்றனர். மாநகராட்சியில் எந்தெந்த பணிக்கு எவ்வளவு லஞ்சம் தர வேண்டும் என எண்ணிடம் பட்டியல் உள்ளது. இதனால் மக்களிடம் கெட்ட பெயர் ஏற்படுகிறது. சுகாதார பணிகள் எதுவும் முறையாக நடைபெறவில்லை. ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆணையாளர் சரவணன்

கவுன்சிலரின் குற்றசாட்டு குறித்து விசாரணை நடத்தப்பட்டு தவறு செய்யும் அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க படும்

கவுன்சிலர் மகேஸ்வரி

மாநகராட்சி அண்ணா காய்கறி மார்கெட்டில் உள்ள கடைகளின் உரிமத்தை புதுப்பிக்க மாநகராட்சி உதவியாளர் குமார் ஒரு கடைக்கு ரூ.15 ஆயிரம் வீதம் வசூல் செய்து வருவதாக குற்றசாட்டு கூறப்படுகிறது. ஆணையாளர்நடவடிக்கைஎடுக்க வேண்டும் என்றார். பின்னர் ஒட்டு மொத்த கவுன்சிலர்களும் தனியாருக்கு விடப்பட்ட குப்பைஅகற்றும் பணியின் டெண்டரை ரத்து செய்ய வலியுறுத்தி கோரிக்கை விடுத்தனர். அப்போது மேயர் சங்கீதா இன்பம் டெண்டரை ரத்து செய்ய நடவடிக்கை எடுப்பதாக கவுன்சிலர்களிடம் தெரிவித்தார்.



### மீண்டும் திமுக ஆட்சி அமைய கடுமையாக உழைக்க வேண்டும்:

# திருப்பத்தூரில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு நிர்வாகிகளுக்கு அறிவுரை!

திருப்பத்தூர் நவ.08

திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியம் ஆதியூர் பகுதியில் உள்ள தனியார்திருமண மண்டபத்தில் நேற்று மாவட்ட திமுக சார்பில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான ஆலோசனை கூட்டம் மாவட்ட செயலாளரும் ஜோலார்பேட்டை எம்எல்ஏ தேவராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதற்குசிறப்புஅழைப்பாளராகதமிழகபொதுப் பணித்துறை அமைச்சரும் மாவட்ட பொறுப்பாளர் எ.வ. வேலு கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசுகையில். தற்பொழுது இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ள வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தந்தை திமுகவின் அனைத்து நிர்வாகிகளும் குறிப்பாக பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் ஒவ்வொரு கிராம கிராமமாக சென்று கண்காணிக்க வேண்டும். அடுத்த ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெறும் சட்டமன்ற பொது தேர்தலில் திமுக மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க வேண்டும்.

அதற்காக அனைத்து நிர்வாகிகளும் ஒன்றிணைந்து கடுமையாக உழைக்க வேண்டும் என பேசினார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் திருவண்ணா மலை எம்பி அண்ணாதுரை, திருப்பத்தூர் எம்எல்ஏ நல்லதம்பி, திமுக ஒன்றிய செயலாளர்கள் மோகன்ராஜ், கவிதா தண்டபாணி, குணசேகரன் , முருகேசன், திருப்பதி, சதீஷ்குமார் , சூரியகுமார், அசோக்குமார் மற்றும் அனைத்து நிலை பொறுப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வேளாண்மை துறை சார்பில் பயிர் காப்பீடு குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தினை அமைச்சர்தா.மோ.அன்பரசன் கொடியசைத்து துவக்கிவைத்தார்.இதில்,மாவட்டஆட்சித்தலைவர்தி.சினேகா,காஞ்சிபுரம்நாடாளுமன்றஉறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி, இ.கருணாநிதி, மு.பாபு, மாவட்ட வருவாய் அலுவலர் மா.கணேஷ் குமார், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) ஸ்ரீதேவி, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் செம்பருத்தி துர்கேஷ், ஒன்றிய குழுத்தலைவர்கள் உதயா கருணாகரன், இதயவர்மன், நகர மன்ற தலைவர்கள் தேன்மொழி நரேந்திரன், எம்.கே.டி.கார்த்திக் தண்டபாணி, இணை இயக்குநர் (வேளாண்மை) பிரேம் சாந்தி, இன்சூரன்ஸ் கம்பெனி ஒருங்கிணைப்பாளர்சிவகுமார்,வனக்குழுதலைவர்வி.ஜி.திருமலைமற்றும்உள்ளாட்சிபிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## படேதலாவ் ஏரியில் இருந்து
# 13 ஏரிகளுக்கு செல்லும் கால்வாய் தூர்வாரும் பணிகள்!
### மதியழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!!

கிருஷ்ணகிரி,நவ.8

கிருஷ்ணகிரி மாவட்டம் காட்டிநாயனப்பள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட படேதலாவ் ஏரியில் இருந்து காட்டாகரம் ஏரிக்கு தண்ணீர் செல்லும் கால்வாய் சமூக பொறுப்பு நிதியின் கீழ் தூர்வாரப்படுகிறது.

இந்த பணிகளை கலெக்டர் தினேஷ்குமார், மதியழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் நேற்று தொடங்கி வைத்தனர். பின்னர் கலெக்டர் தினேஷ்குமார் கூறும்போது:–

முதலமைச்சரின் உத்தரவின் பேரில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் தூர்வாரி, நீர் நிரப்புவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாலேகுளி முதல் சந்தூர் வரை உள்ள 28 ஏரிகளில் நீர் நிரப்புவதற்கு பணிகள் நடந்து வருகிறது.

படேதலாவ் ஏரி சுமார் 163 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏரி 85.35 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்டது. படேதலாவ் ஏரிக்கு வரக்கூடிய தண்ணீரை பர்கூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வெண்ணம்பள்ளி ஏரி, சுண்டம்பட்டி ஏரி, ஓரப்பம் சின்ன ஏரி, பெரிய ஏரி, பாலிநாயனப்பள்ளி ஏரி, ராசிப்பள்ளி ஏரி, கெட்டூர் ஏரி, செந்தாரப்பள்ளி ஏரி, நாராயணப்பன் ஏரி, மோடிகுப்பம் ஏரி, நக்கல்பட்டி ஏரி, பயாஸ்கான ஏரி மற்றும் காட்டகாரம் காசிம்கான் ஏரி ஆகிய 13 ஏரிகளுக்கு நிரப்புவத ற்காக கிட்டதட்ட 18 கிலோ மீட்டர் தூரம் வரை உள்ள கால்வாய்களை சமூக பொறுப்பு நிதியின் மூலம் தூர்வாருவதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதில்கிரேன், ஹிட்டாச், மினிஜேசிபி, டிராக்டர் உள்ளிட்ட 15 வாகனங்கள் மூலம் தூர்வார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தடத்தரை ஆறு, நாச்சிக்குப்பம் ஆறு, மார்க்கண்டேயன் நதி ஆகிய 3 ஆறுகளும் மாரச்சந்திரம் தடுப்பணைக்கு வருகிறது. இந்த தடுப்பணையில் இருந்து வரும் தண்ணீர் மூலம் படேதலாவ் ஏரி 50 சதவிகிதம் அளவு நீர் நிரம்பியுள்ளது.

படேதலாவ் ஏரியில் தூர்வாரும் பணி 2 வார காலங்களுக்குள் முடிக்கப்பட்டு, 13 ஏரிகளுக்கு தண்ணீர் நிரப்பப்படும் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் முத்துராஜ், நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் அறிவொளி, உதவி பொறியாளர் சையத் ஜஹீருதின், தாசில்தார் ரமேஷ், திமுக இளைஞரணி அமைப்பாளர் டி.சி.ஆர். தினேஷ்ராஜன், துணை அமைப்பாளர் வி.சி.என். மகேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## பொள்ளாச்சி அருகே மின்கம்பி உரசியதில்
# வைக்கோல் ஏற்றி வந்த ஈச்சர் லாரி தீப்பிடித்து எரிந்தது!

பொள்ளாச்சி நவ.08–

பொள்ளாச்சி பழைய ஆயக்கட்டு பகுதிகளில் முதல் போக நெல் சாகுபடியில், தற்போது நெல் அறுவடை நடைபெற்று வருகிறது.

ஆனைமலை பெத்தநாயக்கனூர் சாலையில் அய்யாமடை பகுதியில், உள்ள ஒரு நெல் வயலில் அறுவடை பணிகள் முடிந்து, நெல்மணிகள் மூட்டையாக கட்டப்பட்டு விற்பனைக்கு கொ ண்டு செல்லப்பட்ட பின்னர்.

வயலில் மீதமிருந்த வைக்கோல்களை பொள்ளாச்சியை சேர்ந்த வியாபாரி ஒருவர் கொள்முதல் செய்திருந்தார். அதனை கட்டுகளாக கட்டி கொண்டு செல்வதற்கான பணிகள் இன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. சுமார் 40 கட்டுகளைக் கொண்ட வைக்கோல்களை ஈச்சர் லாரியில் ஏற்றினர். லாரியை

பெரியபோது கிராமத்தை சேர்ந்த ஆனந்தகுமார் (35) என்பவர் ஓட்டி வந்துள்ளார். வயலில் இருந்து வைக்கோல் கட்டுகளை ஏற்றிக்கொண்டு லாரி புறப்பட்டபோது, அங்கு தாழ்வாக சென்று கொண்டு இருந்த மின்கம்பியில் வைக்கோல் உரசியது. இதனால் வைக்கோல் தீப்பற்றியது. இதனைக் கண்ட லாரியில் இருந்த நான்கு தொழிலாளர்கள் கீழே குதித்து உயிர் தப்பினர். லாரி தீப்பிடித்து எரிவதைக் கண்ட ஓட்டுனர் ஆனந்த் லாரியிலிருந்து கீழே குதித்தார். உடனடியாக பொள்ளாச்சி தீயணைப்பு நிலை யத்திற்கு தகவல் தெரிவித்தனர்.

தகவல் அறிந்து, நிலைய அலுவலர் கணபதி தலைமையில் அங்கு வந்த தீயணைப்புத் துறையினர் சுமார் ஒரு மணி நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்து அணைத்தனர்.

இதன் மதிப்பு ரூ. 7 லட்சம் மதிப்பில்லான ஈச்சர் லாரி மற்றும் ரூ.15 ஆயிரம் மதிப்புடைய வைக்கோல் என்பது தெரியவந்தது.



தருமபுரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சோலைக்கொட்டாய் பகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரதிருத்தப்பணிக்கான கணக்கெடுப்பு படிவம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வீடு வீடாக வாக்காளர்களுக்கு வழங்கப்படுவதை மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் வட்டாட்சியர் சௌகத் அலி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## தேன்கனிக்கோட்டை அருகே
# 5 மாத ஆண் குழந்தை திடீர் சாவு!
## போலீசில் மனைவி மீது கணவன் புகார்!!

கெலமங்கலம்,நவ.8

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகே உள்ளது கிராமம் சின்னட்டி .இந்த கிராமத்தை சேர்ந்தவர் சுரேஷ் வயசு 38 இவரது மனைவி பெயர் பாரதி . சுரேஷ் பெயிண்டர் தொழில் செய்து வருகிறார்.இவர்களுக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளன. 5 மாதத்துக்கு முன்பு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தை பெயர் துருவன்.கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு பாரதி கணவரிடம் தகராறு செய்துவிட்டு தாய் வீடானகுந்துமாரணபள்ளி கிராமத்திற்கு சென்றார் .மீண்டும் குடும்பத்தினர் சில பேர் சமரசம் செய்ததால் பாரதி கணவருடன் சின்னட்டி கிராமத்தில் இருவரும் குடும்பம் நடத்தி வருகின்றனர் .சுரேஷின் தங்கை பாரதி அதே சின்னட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறார் .சுரேஷ் தங்கை பாரதியும், சுரேஷ், இருவரும் கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு அவசர பணி காரணமாக வெளியூர் சென்று விட்டனர்.

மாலையில் வீட்டிற்கு சுரேக்ஷ் வரும்போது குழந்தை பேச்சு மூச்சின்று கிடந்துள்ளது.

இது பற்றி சுரேஷ் பாரதியிடம் கேட்க குழந்தை பால் குடிக்கும் போது இருமல் புரையேறி இப்படி பேச்சு மூச்சின்றி கிடப்பதாக கணவரிடம் தகவல் சொல்ல கணவர் மனைவி மற்றும் உறவினர்கள் உடனடியாக கெலமங்கலம்அரசு மருத்துவமனைக்கு குழந்தையை அழைத்து சென்றுள்ளனர். குழந்தையை பரிசோதித்த மருத்துவர் குழந்தை ஏற்கனவே



இறந்து விட்டதாக தகவல் கூறியுள்ளார். பின் சுரேஷும் பாரதியும் குழந்தையை கிராமத்திற்கு எடுத்து சென்று விட்டனர் .அன்று இரவு நேரம் ஆகி விட்டதால் மறுநாள் புதன் கிழமை குழந்தையை அடக்கம் செய்து விட்டனர். குழந்தை திடீரென இருந்த மன உளைச்சலில் இருந்த சுரேஷ் தனது குழந்தை சாவில் சந்தேகம் இருப்பதாக, மனைவி மீது கெலமங்கலம் போலீசில் புகார் செய்தார் அதன் அடிப்படையில் போலீசார் வழக்கு பதிவு செய்து பாரதியிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஆம்பூர் அருகே
# பள்ளத்தில் லாரி கவிழ்ந்து விபத்து!
### ஓட்டுனர் உயிர் தப்பினார்!!



ஆம்பூர்.நவ.8

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த கதவாளம் பகுதியிலிருந்து எலும்புத்துகள்களை ஏற்றிக்கொண்டு கேரள மாநிலம் பாலக்காடு நோக்கி சென்று லாரி கொண்டிருந்தது. அப்போது ஆம்பூர் அருகே வடசேரி கிராம சாலையில் லாரி பாரம் தாங்காமல் சாலையின் பக்கவாட்டில் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் லாரி ஓட்டிச் சென்ற ஓட்டுனர் அசோகன் சிறு காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். விபத்து குறித்து உமராபாத் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



தர்மபுரி மாவட்டம் சித்தேரி மலை கிராமங்களுக்கு சாலை அமைக்கும் பணிக்கான பூமிபூஜை நடந்தது. இதில் வருவாய் ஆய்வாளர் குமரேசன், வனத்துறை அதிகாரிகள், பாப்பிரெட்டிப்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் சந்தோஷ்குமார் உள்பட பலர் பங்கேற்றனர்.

# வாய்க்காலில் மூழ்கி தொழிலாளி பலி!

கோபிநவ 8–

கோபி அடுத்த நம்பியூர் எ.செட்டிபாளைத்தைச் சேர்ந்தவர் குமாரசாமி (52) இவரது மனைவி எலத்தூர் பேரூராட்சி திமுக கவுன்சிலர் சாந்தாமணி இவர்களுக்கு ஒரு மகன் ஒரு மகள் உள்ளனர் குமாரசாமி மூணம்பள்ளியில்ஒரு தனியார் மில்லில் வேலை செய்து வந்தார். நேற்று மதியம் குமாரசாமி அவரது மாமா சம்பத்குமார் இருவரும் கீழ்பவானி வாய்க்காலில் குளிக்க சென்றனர் அப்போது குமாரசாமி ஆழமான பகுதிக்கு சென்றதால் நீச்சல் தெரியாததால் தண்ணீர் இழுத்துச் சென்றது அருகில் இருந்த சம்பத்குமார் நம்பியூர் தீணைப்பு படையினருக்கு தகவல் கொடுத்து தீயணைப்பு வீரர்கள் கீழ் பவானி வாய்க்காலில் தேடினர். நீண்ட நேரத்திற்கு தொழிலாளி உடலை மீட்டு கடத்தூர் போலீசார் விசாரணை செய்து வருகின்றனர்



திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த ஆலாங்குப்பம் கிராமத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி மேற்கொள்ள வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள்( BLO) மூலம் வீடு, வீடாகச்சென்றுவாக்காளர்கணக்கீட்டுபடிவம்வழங்கப்பட்டுவருகிறது.இப்பணியை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான சிவசௌந்திரவல்லி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது ஆம்பூர் வட்டாச்சியர் ரேவதி மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உடனிருந்தனர்.

# வரும் சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.வை தோற்கடிப்போம்!
## நயினார் நாகேந்திரன் பேட்டி!!



மேட்டுப்பாளையம், நவ.08–

தமிழகம் தலைநிமிர தமிழனின் பயணம்நிகழ்ச்சியின்ஒருபகுதியாககோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வருகை தந்த தமிழக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் காரமடை அரங்கநாதர் கோவிலுக்கு வழிபாடு செய்த பின்னர் தேரம்பாளையம் கிராமத்திற்கு வந்து அங்கு கூடியிருந்த மக்களின் கோரிக்கைகளை கேட்டு மனுக்களை பெற்று பதிலளித்து பேசினார்.

தேரம்பாளையம் கிராம கோவில் வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்தில் விவசாயிகள், நெசவாளர்கள், சமூகநல இயக்கங்கள், சமுதாய தலைவர்களை சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து மனுக்களை பெற்றுகொண்டார். இதன் பின்னர் கூட்டத்தில் பேசிய நயினார் நாகேந்திரன், "விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்ப மேட்டுப்பாளையம் கறிவேப்பிலைக்கு விரைவில் புவிசார் குறியீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும், நெசவு தொழிலுக்கு புகழ்பெற்ற சிறுமுகை பகுதியில் மத்திய ஜவுளி பூங்கா அமைக்கவும் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் நெருங்குவதால் அரசு அதிகாரிகள் தற்போதைய ஆட்சியாளர்களின் பேச்சை கேட்பதில்லை என்பதால் மாநில அரசு மூலம் நிறைவேற்றப்படகோரிக்கைகள்அடுத்து ஆட்சியமைக்கும் எடப்பாடி பழனிசாமியின் தலைமையிலான ஆட்சியில் தவறாமல் நிறைவேற்றப்படும் என்றார்.

நிகழ்ச்சியில் அவருடன் அதிமுக வின் கோவை வடக்கு புறநகர் செயலாளர் பி.ஆர்.ஜி அருண்குமார் எம்எல்ஏ, பாஜக பொது செயலாளர் ஏ.பி. முருகானந்தம், பாஜக விவசாய அணி மாநில தலைவர் ஜி.கே.நாகராஜ், பாஜக கே.பி ராமலிங்கம், முன்னாள் நகர மன்ற தலைவர் சதீஷ் குமார் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் உடனிருந்தனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் தமிழக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன்கூறுகையில்,

விஜய் கட்சி தனது தலைமையில் தான் தேர்தலை சந்திக்கும் என்பது உங்கள் அணிக்கு பின்னடைவா என்ற கேள்விக்கு, "எங்கள் அணிக்கு எந்த பாதிப்பும் இல்லை,

சொத்து வரி, குடிநீர் வரி, மின்சார கட்டணம் என அனைத்தையும் பல மடங்கு உயர்த்திய திமுக அரசு மீது மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

வரும் சட்டமன்ற தேர்தலில் எங்களது தேசிய ஜனநாயக கூட்டணி தான் வெற்றி பெறும். கோவை பெண்களுக்கு பாதுகாப்பான நகரம் என்பது இந்த ஆட்சியில் மாறியுள்ளது. கோவையில் கஞ்சா போதையில் மாணவியை மூன்று பேர் இழுத்து சென்று சீரழித்துள்ளது தமிழக முதலமைச்சரின் கீழ் உள்ள காவல்துறையின் சீரழிவை காட்டுகிறது.வரும் தேர்தலில் இவையனைத்தும் மாறும்" என்றார்.

## தி.மு.க. உறுப்பினர் வைஷ்ணவி அளித்த புகார்:
# இன்ஸ்டாகிராம் பிரபலம் அதிரடி கைது!

கோவை,நவ.8

கோவையைச் சேர்ந்த தி.மு.க. உறுப்பினர் வைஷ்ணவி(வயது 20). இவர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தில் நிர்வாகியாக இருந்த நிலையில், அக்கட்சியில் இருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தார்.

தொடர்ந்து சமூக வலைதளங்களில் த.வெ.க. குறித்தும், அக்கட்சியை சேர்ந்தவர்களின் செயல்பாடுகள் குறித்தும் வைஷ்ணவி கடுமையாக விமர்சித்து வருகிறார்.

இதற்கிடையில் கரூர் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் த.வெ.க.



தலைவர் விஜய்யை சந்திப்பதற்காக மாமல்லபுரத்திற்கு சென்றதை குறிப்பிடும் வகையில் ஏ.ஐ. வீடியோ ஒன்றை வைஷ்ணவி பகிர்ந்திருந்தார். இதற்கு த.வெ.க. தொண்டர்கள் கடும் விமர்சனங்களைமுன்வைத்தனர். இந்த நிலையில், இன்ஸ்டாகிராம் பிரபலமான கார்த்திக் என்பவர், வைஷ்ணவியின் புகைப்படத்துடன் கூடிய சர்ச்சைக்குரிய வீடியோவை வெளியிட்டு இருந்தார்.

இது குறித்து வைஷ்ணவி அளித்த புகாரின் பேரில், கார்த்திக் மீது தகவல் தொழில்நுட்ப சட்டம், பெண்கள் வன்கொடுமை சட்டம், கொலை மிரட்டல் உள்பட ஆறு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து சைபர் கிரைம் போலீசார் அவரை கைது செய்துள்ளனர்.



மேட்டூர் அருகே நங்கவள்ளி சோரகை மலையில் மாவட்ட ஆட்சி தலைவர் பிருந்தா தேவி தலைமையில் அரசு அதிகாரிகள் மலையேறும் பயிற்சியில் ஈடுபட்டனர்.